Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 மாசி 07 வியாழக்கிழமை (18-02-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 83

# டிக்ஸிற் - பேனாட் திலகரத்ன நேற்று புதுடில்லியில் பேச்சு!

## கடற்படை நடவடிக்கைகள் விரிவாக ஆராயப்பட்டன?

புதுடில்லி, பெப்ரவரி 18

பாக்குநீரிணையில் மேற்கொள்ளப்படும் இருதரப்பு கடற்படை நடவடிக்கைகள் உட்பட பல்வேறு விடயங்கள் குறித்து இலங்கை—இந்திய வெளியுறவுச் செயலர்கள் நேற்று புதுடில்லியில் கூடிப் பேசியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை வெளிநாட்டு அமைச்சின் செயலாளர் பேர்னாட் திலகரத்னவும் இந்திய வெளியுறவு அமைச்சுச் செயலாளர் ஜே. என். டிக்ஸிற்றும் தத்தமது நாடுகளின் அதிகாரிகள் சகிதம் நேற்று பல முக்கியமான இரு தரப்பு விவகாரங்களை ஆராய்ந்ததாகத் தெரியவந்தது.

பாக்குநீரிணைப் பகுதியில் இந்திய — இலங்கைக் கடற்படைகள் புலிகளுக்கு எதிராகக் கூட்டாக நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருவதாகச் செய்திகள் வெளியாகியிருக்கும் வேளையில் இச்சந்திப்பு இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

பாக்குநீரிணைக் கடற்பகுதியில் இருநாட்டு மீனவர்களுக்கும் ஏற்படும் அசௌகரியங்கள் குறித்து இப்பேச்சுக்களின் போது பேசப்பட்டதாக ''தூரதர்ஷன்'' நேற்றிரவு அறிவித்தது.

'சார்க்' தொடர்பான விடயங்கள், இருதரப்பு உறவுகள் மற்றும் எதிர்வரும் ஜூனில் மிகிந்தலையில் நடைபெறவிருக்கும் மிகிந்த ஜெயந்தி கொண்டாட்டங்களில் கலந்து கொள்ள இந்திய ஜனாதிபதி சங்கர் தயாள் சர்மா இலங்கைக்கு மேற்கொள்ளும் விஜயம், இந்திய — இலங்கை பொருளாதாரக் குழுவின் நடவடிக்கைகள் ஆகியவை பற்றியும் அவர்கள் பேசியதாக அறிவிக்கப்பட்டது.

## 163 தபால் பொதிகள் 'குமாரி' கப்பலில் வந்தன

யாழ்ப்பாணம், பெப். 18

3 ஆயிரத்து 200 மெற்றிக் தொன் உணவுப் பொருள்களுடன் ''குமாரி'' கப்பல் நேற்று பருத்தித்துறை துறைமுகத்துக்கு வந்து சேர்ந்தது.

கப்பலில் எடுத்து வரப்பட்ட 163 தபால் பொதிகளும் யாழ். புனர்வாழ்வுப் பிரிவு அதிகாரிகளினால் முன்னுரிமை அடிப்படையில் இறக்கப்பட்டன. அவை யாழ். தபாலகத்தினால் இன்று தரம் பிரிக்கப்பட்டு விநியோகிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கப்பலில் உள்ள பொருள்களை யாழ். செயலகந்திட்டமிடல் பணிப்பாளர் திரு. எஸ். பந்மநாதன் கப்பலில் வைத்து பொறுப்பேற்றதை அடுத்து, பொருள்களை இறக்கும் வேலை உடனடியாக ஆரம்பிக்கப்பட்டது.

இக்கப்பலில் அரிசி மா, சீனி, பருப்பு, மண்ணெண்ணெய் மற்றும் உரவகைகள், அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்களுக்குரிய பொருள்கள் என்பன எடுத்துவரப்பட்டுள்ளன.

(உ-3-17-109-152)

## மேலும் ஒரு கப்பலில் வடக்கிற்குப் பொருள்கள்

கொழும்பு, பெப். 18

யாழ்ப்பாணத்துக்கான உணவுப் பொருள்களை ஏற்றிச் செல்வதற்காக மேலும் ஒரு கப்பலை வாடகைக்கு அமர்த்த புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட கப்பல் கம்பனிகளுடன் பேச்சுக்கள் நடப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

வடபகுதிக்கு பொருள்கள் ஏற்றிச் செல்வதற்காக குமாரி, குமண, மெரினால் ஆகிய மூன்று கப்பல்கள் ஏற்கனவே வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ளன என்பது தெரிந்ததே. (ஒ-3)

## சர்வதேச செஞ். அதிகாரி யாழ்ப்பாணத்தில் பேச்சு

யாழ்ப்பாணம், பெப். 18

யாழ். மாவட்டத்துக்கு உணவுப் பொருள்களை கப்பல் மூலமும், வாகன அணி மூலமும் எடுத்துவரும் நடவடிக்கைகளுக்கு பொறுப்பான செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக்குழு அதிகாரி திரு. லூக் நேற்று யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகருடன் கலந்துரையாடினார்.

உணவுப் பொருள்களை வடக்கே எடுத்துவருவதில் உள்ள தடங்கல்கள், பருத்தித்துறை இறங்குதுறை திருத்த வேலைகள், குடாநாட்டில் அத்தியாவசிய பொருள்களின் கையிருப்பு ஆகிய விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டதாக அறியவந்தது.

திரு. லூக் நேற்று மாலை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் பிரதிநிதிகளையும் சந்தித்தார். அகதிமுகாம்களில் நிலவும் பிரச்சினைகள், அவசர நிவாரண உதவிகள் ஆகியவை குறித்து அவர்கள் கலந்துரையாடினர். [உ]

## மணலாறுப் பகுதியில் 'வனவெற்றி' நடவடிக்கை

கொழும்பு, பெப். 18

ஸ்ரீலங்கா இராணுவம் கடந்த திங்களன்று மணலாறுப் பகுதியில் புதிய தாக்குதல் நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்திருப்பதாகவும்—

விடுதலைப் புலிகளின் வசம் உள்ள பிரதேசங்கள் மீது ஆரம்பிக்கப்பட்டுள்ள இத்தாக்குதலுக்கு ''வனவெற்றி'' எனப் பெயரிடப்பட்டிருப்பதாகவும்—

இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்ததாக செய்தி ஏஜென்ஸி ஒன்று அறிவித்தது.

இந்த நடவடிக்கையின் போது சிறு தாக்குதல் சம்பவங்களே இடம்பெற்றன என்றும்—

இரு தரப்பிலும் உயிரிழப்புகள் ஏதும் ஏற்படவில்லை என்றும் அப்பேச்சாளர் மேலும் கூறினார். (உ-எ)

## ஆலயங்களில் நாளை இரவு சிவராத்திரி நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், பெப். 18

சிவ விரதங்களுள் சிறந்ததான மகா சிவராத்திரி விரதம் நாளை குடாநாட்டின் பல பகுதிகளிலும் உள்ள ஆலயங்களில் அனுஷ்டிக்கப்படும். சைவப் பெருமக்கள் நாளை இரவு ஆலயங்களில் கூடி விழித்திருந்து பஜனை, பண்ணிசை, புராண படனம் ஆகியவற்றில் ஈடுபடுவர்.

ஆலயங்களில் சிறப்பான முறையில் நான்கு சாமப் பூசைகள் நடைபெறும். சமயச் சொற்பொழிவுகள், கதாப்பிரசங்கங்கள், இசைக் கச்சேரிகள் மற்றும் கலை நிகழ்ச்சிகளும் ஆலயங்களில் இடம்பெறும்.

நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் ஆலயத்தில் நாளை இரவு 7 மணி முதல் விசேட பூசைகள் நடைபெறும். நள்ளிரவு 12 மணிக்கு லிங்கோற்ப அபிஷேகம் இடம்பெறும்.

வண்ணை நகர் வைத்தீஸ்வரன் ஆலயத்தில் விசேட பூசைகளுடன் சொற்பொழிவு கதாப்பிரசங்கம், இசைக் கச்சேரிகளும் நடக்கும்.

வட்டுக்கோட்டைவிசாலாட்சி சமேத விஸ்வநாதப் பெருமாள் ஆலயம், ஆவரங்கால் சிவன் ஆலயம், சாவகச்சேரி வாரிவன நாதர் சிவன்கோவில் நல்லூர் சிவன் கோவில் பருத்தித்துறை பசுபதீஸ்வரர் கோவில், இணுவில் காரைக்கால் விசாலாட்சி சமேத விஸ்வநாத சுவாமி கோவில், வட்டுக்கோட்டை கண்ணலிங்கேஸ்வரர் ஆலயம் ஆகிய சிவன் ஆலயங்களில் சிவராத்திரி பூசைகள், நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெறும் என

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், பெப். 18

காரைநகர் இராணுவ முகாமில் இருந்து நேற்றுமுன்தினம் இரவு பொன்னாலை குடியிருப்புப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதனால் சில வீடுகள் சேதமடைந்தன.

இதேவேளை மாதகல், திருவடிநிலை கடற்பிராந்தியத்தில் இருந்தும் கரையோரப் பகுதிகளை நோக்கி பீரங்கித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது

[உ 15 161]

## ஹெலி நோட்டம்

நேற்றுக் காலை 7 30 மணியளவில் ஹெலிகொப்டர் ஒன்று குடாக்கடல் பிரதேசத்தை வட்டமிட்டுச் சென்றது.

குருநகர், பாஷையூர், மண்டைதீவு, பூநகரி, கல்முனை, கொழும்புத்துறை, அரியாலைப் பகுதிகளையே ஹெலி நோட்டமிட்டது. (உ-5!)

## பிரேமாவை இழிவுபடுத்தும் புகைப்படங்கள்

ஜனாதிபதியையும் அவரது குடும்பத்தினரையும் இழிவுபடுத்தும் வகையில் புகைப்படங்களை பிரசுரிக்க மேற்கொள்ளப்படும் ''ஒரு சதி'' முயற்சி பற்றி இரகசியப் பொலிஸாருக்கு முறைப்பாடு கிடைத்துள்ளதாம்

கண்டியில் இந்த புகைப்படங்களைப் பிரசுரிக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

## சு.க. - இடதுசாரிகள் கூட்டணி: அநுரா அணி கடும் எதிர்ப்பு

கொழும்பு, பெப். 18

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்குள் பிளவு அதிகரித்து நெருக்கடி முற்றி வருவதாக கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மாகாண சபைத் தேர்தல்களைக் கருத்தில் கொண்டு இடதுசாரிக் கட்சிகளுடன் கூட்டுச் சேர கட்சித் தலைவி சிறிமா முயன்று வருகிறார். அதற்கு கட்சியின் மத்திய குழுவின் ஆதரவையும் திரட்டி வருகிறார்.

ஆனால் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களில் அதிகமானோரை தமது கைக்குள் வைத்திருக்கும் அநுரா பண்டார நாயக்கா, இடதுசாரிகளுடன் கூட்டு வைப்பதற்கு தமது தாயார் எடுத்து வரும் முயற்சிகளைக் கடுமையாக எதிர்த்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

கட்சிச் சின்னத்தையும் கட்சிக் கொடியையும் இடதுசாரிகளுக்கு அடகு வைக்க சிறிமா முயல்வதாக அநுரா அணியினர் குற்றம் சுமத்தி வருகின்றனர்.

சிறிமா மீது குற்றம் சுமத்தும் பிரேரணையில் அவரது கட்சியைச் சேர்ந்த 40 எம். பிக்கள் கையெழுத்திட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது (உ-3)

## மூன்று ஆண்டுகளில் இராணுவச் செலவு மூன்று மடங்கானது

### ஜனாதிபதி பிரேமா கவலை

கொழும்பு, பெப். 18

வடக்கு கிழக்கில் பாதுகாப்புச் செலவு 1989 ஆம் ஆண்டில் இருந்ததைவிட இப்போது மூன்றுமடங்காகி உள்ளது. அப்போது வடக்கு-கிழக்கில் இராணுவச் செலவு 800 கோடி ரூபாவாக இருந்தது. ஆனால் இன்று அந்தத் தொகை 2,300 கோடி ரூபாவாக உயர்ந்துள்ளது

இவ்வாறு கவலை வெளியிட்டிருக்கிறார் ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா.

கொழும்பில் நேற்று முன்தினம் நடந்த வைபவம் ஒன்றில் பேசுகையிலேயே ஜனாதிபதி இந்தப் புள்ளிவிவரத்தை வெளியிட்டார்.

வடக்கு-கிழக்கில் நடக்கும் யுத்தத்துக்கு மட்டுமான இராணுவச் செலவுக்கு மாத்திரமன்றி யுத்தத்தினால் பாதிக்கப்படும் மக்களின் சேமநலனுக்காகவும் பலகோடி ரூபாவைச் செலவிடவேண்டியுள்ளது. — என்றும் ஜனாதிபதி சொன்னார். (அ-3)

## ராஜீவ் கொலை வழக்கு விசாரணை ஒத்திவைப்பு

சென்னை, பெப். 18

ராஜீவ் கொலைவழக்கு விசாரணை மீண்டும் அடுத்த மாதம் மூன்றாம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இவ்வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட [illegible] உட்பட 26 பேரும் நேற்று பூந்தமல்லியில் உள்ள விசேட நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்

எதிரிகள் அனைவரையும் அடுத்த மாதம் 3 ஆம் திகதி வரை காவலில் வைக்கும்படி [illegible] எஸ். எம். சித்தீக் உத்தரவிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டமன்றத் தேர்தல்கள்:

## மேகாலயா, நாகலாந்தில் காங். கணிசமான வெற்றி

புதுடில்லி, பெப். 18

மேகாலயா, நாகலாந்து மாநிலங்களில் நடைபெற்ற சட்ட மன்றத் தேர்தல்களில் இந்திரா காங்கிரஸ் கட்சி கணிசமான வெற்றியை ஈட்டியிருக்கிறது.

நேற்று நள்ளிரவு வரை வெளியான முடிவுகளின்படி, இரு மாநிலங்களிலும், அதிகப்படியான இடங்களை வென்ற தனிக்கட்சி என்ற நிலை இந்திரா காங்கிரஸுக்குக் கிடைத்திருக்கிறது.

60 இடங்களைக் கொண்ட மேகாலயாவில் 32 முடிவுகள் வெளியான நிலையில் அவற்றில் 12 இடங்கள் காங்கிரஸுக்குக் கிடைத்துள்ளன. மேகாலயா சம்மேளனம் தலைமையிலான எதிரணிக் கூட்டணி வேட்பாளர்கள் 12 இடங்களையும் சுயேச்சைகள் எட்டு இடங்களையும் பெற்றுள்ளனர்.

ஐம்பது தொகுதிகளைக் கொண்ட நாகலாந்தில் பத்து முடிவுகள் வெளியானபோது அவற்றில் ஆறு காங்கிரஸுக்குக் கிடைத்துள்ளன. நாகலாந்து தேசிய கவுன்ஸில் கட்சி இரு இடங்களிலும் சுயேச்சைகள் இரு இடங்களிலும் வென்றுள்ளனர்.

(உ-எ-5)

**உளவாளிகள்!!!**

**அவதானமாக இருக்கவும்..!**

தன் தேவை நிறைவேற

நல்ல காரணம் கூறுவான் உளவாளி!

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

ஜாம் வெற்றுப் போத்தல்கள் தொகையாக விற்பனைக்கு உண்டு. உடன் தொடர்பு கொள்ளவும்: N. பாலேந்திரன், இல. 305, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (24469)

கடைத் தளபாடங்கள், சோக்கேஸ், இனிப்புப் போத்தல்கள், சோடாப் போத்தல்கள், பெரிய குளிர்சாதனப் பெட்டிகள் விற்பனைக்குண்டு. திங்கள், புதன்கிழமைகளில் காலை 9 மணி முதல் 11மணி வரை சற்குணம் புத்தகசாலை, சந்தையடி, மானிப்பாய் என்ற முகவரியில் தொடர்பு கொள்ளலாம். (சி-4457)

## தேவை

டீசல் வேலையில் அனுபவமுள்ள மெக்கானிக் தேவை. தொடர்பு: சிவலிங்கம் மோட்டோர்ஸ், 77, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (6009)

## இலவச திருமண சேவை

36 வயது, விசாகம், ஜேர்மனியில் தொழில் புரிபவருக்கு மணப்பெண் தேவை இலங்கையில் திருமணம் செய்து அழைக்கலாம். பதிவு செய்பவர்களுக்கு பொருத்தமான குறிப்புகள்: ஞாயிறு காலையில். விமலா, யாழ் நாச்சிமார் கோவிலடி. (24460)

## தவறிவிட்டது

10-02-93 அன்று சோமசுந்தரம் அவெனியூ ரக்கா வீதிக்கும் கண்டி வீதிக்கும் இடையில் பிளாஸ்டிக் பிரேம் கொண்ட மூக்குக்கண்ணாடி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்கண்ட விலாசத்தில் ஒப்படைக்கவும். 25, சோமசுந்தரம் அவெனியூ, சுண்டுக்குளி. (24488)

## சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் விருத்தியாகுமா? விவாகம் நடைபெறுமா? கேட்டுப் பாருங்கள். த. சிவானந்தன், பிரபல சோதிடர், ஆனந்தா சோதிட நிலையம், இல. 384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு. (24467)

## ஆங்கிலக் கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் ஆங்கிலம் ஆரம்ப அறிவில் இருந்து தனிப்பட்ட முறையிலும், வீடுகளிலும் கற்பிக்கப்படும். தொடர்பு: சனி ஞாயிறு காலை 8 '0 மணி 204, மானிப்பாய் றோட், ஒட்டுமடம், யாழ்ப்பாணம். (6 08)

---

NEW ENGLISH ACADEMY
ஆரியகுளம், யாழ்ப்பாணம்.

SPECIAL ENGLISH CLASSES

G A.Q
(E. S L.) Aug (1993)
(பாடத்திட்டத்திற்கேற்ப அலகுரீதியாக கற்பிக்கப்படும்)

ஆரம்பம்:
இன்று 18 - 02 - 1993
வியாழன் 5-00 மணி)
(சனி, ஞாயிறு வகுப்புகள் எதிர்வரும் சனி காலை 11-00 மணிக்கு ஆரம்பிக்கப்படும்)

– நிர்வாகி.
(சி-4460)

---

## சாரணர் தினம்

காங்கேசன்துறை மாவட்ட சாரணர் கிளைச் சங்க சாரண ஸ்தாபகர் தினமும், சிந்தனை நாளும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரியில் எதிர் வரும் திங்கட்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு நடைபெறும். (க-152-90)

---

NEW ENGLISH ACADEMY
ஆரியகுளம், யாழ்ப்பாணம்.

SPOKEN ENGLISH
With
GRAMMAR

புதிய பிரிவு ஆரம்பம்
இன்று
18 - 02 - 93
(வியாழன் மாலை 3-மணி)

By
R. SIVALINGAM
[Dip - in - English]

[G C. E. (O/L) வகுப்புக்கள் நடைபெறுகின்றன]
(சி/4459)

---

NEW ENGLISH ACADEMY
82 பருத்தித்துறை வீதி, ஆரியகுளம், யாழ்ப்பாணம்.

SPECIAL ENGLISH CLASSES

★ மார்ச் மாதம் 6ஆம் திகதி நடைபெறவிருக்கும் ஆங்கில ஆசிரியர்கள் ஆட்சேர்ப்பிற்கான துரித ஆங்கில மீட்டல் வகுப்புக்கள்.

ஆரம்பம்:
இன்று வியாழன்
18–02–1993
(பி. ப. 4மணி)
(நாளாந்தம் 2 மணித்தியால வகுப்புக்கள்)

By R. SIVALINGAM
(Dip.in - English)
— நிர்வாகி.
(சி-4461)

---

கிழக்கு இலங்கை பல்கலைக்கழகம்

## விரிவுரைகள்

கிழக்கு இலங்கை பல்கலைக்கழக பதிவாளரினால் அனுப்பப்பட்ட செய்தியில் அப்பல்கலைக்கழக விரிவுரைகள் இம்மாதம் 15 02-93 ஆம் திகதி ஆரம்பமாகின்றன எனவும் விரிவுரைகளுக்கு சமுகம் அளிப்பதற்காக மாணவர்களை பிறப்புச் சான்றிதழ், கல்விச்சான்றிதழ் (மூலப் பிரதிகள்) மற்றும் ஆவணங்களுடன் உடனடியாக கிழக்கு இலங்கை பல்கலைக்கழகத்தில் சமுகமளிக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மாணவர்களின் பெயர்ப்பட்டியல் பரீட்சைக் கிளை யாழ் பல்கலைக்கழக அறிவித்தல் பலகையில் போடப்பட்டுள்ளது. தனிப்பட்ட கடிதங்கள் அனுப்பி வைக்கப்படும்.

– பதிவாளர்
(சி-4539)

---

# விஷைல்ஸ்

கல்வி நிலையம்
சுன்னாகம்


## பொருளியல்

93 A/L மீட்டல்
வினா விடை வகுப்பு
சனி, ஞாயிறு 1. 30 p.m.

ஆசிரியர்:
திரு. கலாகரன்
(5822)

---

# 31ஆம் நாள் அமரத்துவ அஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



காரைநகர் வாரிவளவு

## அமரர் இராமுசண்முகம் பேரம்பலம்

(உரிமையாளர்; E.S. பேரம்பலம் அன் கோ, யாழ்ப்பாணம்)

தூல முகிழ்ப்பு: 26 - 04 1926
தூல அவிழ்ப்பு: 19 - 01 - 1993

திதி: 18 — 02 — 1993

அற்புத ஒளி விளக்காய் அனைவர்க்கும் புகலிடமாய்
சற்குண நெறி கொண்ட சீராளன் ஈ எஸ். பி.
கற்பக விநாயகன் கழலிணைச் சேர்ந்தார்
கற்பனைக் கெட்டாத துயரத்தில் வாடுகிறோம்.

காரைநகரின் கண்ணான ஈ எஸ். பி.
ஊரை உறவைப் பிரிந்து; கண்ணில்
நீரை வரவழைத்து விண்ணகந்தான் போனதென்ன
யாரை நொந்தழுவோம் நாமிங்கே வாடுகின்றோம்.

அணைந்தும் அணையாத சோதியாய், அன்பு, பண்பு, பாசம் என்ற முக்கோணங்களிலும் சிறந்து வாழ்ந்து அரும்பெரும் சோதியில் சங்கமித்த எமது குடும்பத் தலைவரின் இறுதிச் சடங்கில் பங்கு கொண்டு பல்வேறு உதவி, ஒத்தாசை புரிந்த, எம்மைப் பெருமைப் படுத்திய உற்றார், உறவினர், நண்பர்கள் அன்றைய நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்த அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றிகள்.

இன்று 18 - 02 - 1993 காலை 9-00 மணிக்கு எமது இல்லத்தில் அன்னாரின் ஆத்ம சாந்திக்கான கிருத்தியங்கள் நடைபெறும். அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்:
E. S. பேரம்பலம் குடும்பத்தினர்,
90, ஜும்மா மொஸ்க் லேன்,
யாழ்ப்பாணம்.

E. S. பேரம்பலம் அன் கோ,
50, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (24491)

---

யாழ். மிட் ரவுண் றோட்டறக்ற் கழகம் நடாத்தும் மாபெரும்

# கண்காட்சி

இடம் : யாழ். இந்து மகளிர் கல்லூரி
காலம்: 19 - 02 - 93 நண்பகல் 12.00 மணி — இரவு 10.00 மணி
20 - 02 - 93 காலை 8.00 மணி — மாலை 4.00 மணி
21 - 02 - 93 காலை 8.00 மணி — மாலை 4.00 மணி

★ நுழைவாயில் சீட்டு மண்டப வாயிலில் ★

கோலக் கண்காட்சி
கண்கவர் மீனினங்கள் (கடல் மீன்கள் உட்பட)
முத்திரைகள் (22, 24 கரட் தங்க முத்திரை)
விளக்கு வகைகள்

விளம்பர அமைப்பு:-
பிராங் எம்போறியம் Shoes Center
கஸ்தூரியார் வீதி.
(சி-4541)

---

## விண்ணக வாழ்வின் எட்டாம் ஆண்டு நினைவு நாள்

மலர்வு: 23 — 09 — 1927



உதிர்வு: 18 — 02 — 1985

### அமரர் அ. யோசவ் அலோஷியஸ்

(வர்த்தகர், தெஹிவளை லூட்ஸ் ஸ்ரோர்ஸ், பண்டத்தரிப்பு அலோஷியஸ் ஹாட்வெயார்ஸ்)

''என்னில் விசுவாசம் கொள்பவன்
இறப்பினும் வாழ்வான்''

இவரின் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்.

சில்லாலை,
பண்டத்தரிப்பு (5799)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மறைவு: 20 — 01 — 1993

அமரர்

### நாகலிங்கம் சுப்பிரமணியம்

சூராவத்தை முத்துமாரிஅம்பாள் ஆலயத்தர்மகர்த்தா சபையில் 1964 ஆம் ஆண்டுமுதல் பொருளாளராகவும், தலைவராகவும், நிர்வாகப்பொறுப்பாளராகவும், சேவிய அங்கத்தவராகவுமிருந்து சிவபதம் அடையும் வரை அரும் பெரும் தொண்டுகள் பல ஆற்றிய அமரர் நா சுப்பிரமணியம் அவர்களின் ஆன்மா சாந்தியடைய எல்லாம்வல்ல முத்துமாரி அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

சூராவத்தை முத்துமாரி அம்மன் கோவில்
பரிபாலன சபையினர்.

சூராவத்தை,
சுன்னாகம். (5825)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

# பாரபட்சம் தீர பரிகாரம்

ஐ. நா. உணவு விவசாய ஸ்தாபனம் தொடர்ந்தும் இலங்கை அகதிகளுக்கு நிவாரணமாக உணவுப் பொருள்களை வழங்குவதற்கு முடிவு செய்திருக்கிறது இதே வேளை—ஐ.நா. உணவு விவசாய ஸ்தாபனத்தால் கடந்த ஆறு மாதங்களாக வழங்கப்பட்ட உதவி, வடக்கு- கிழக்கு யுத்தத்தினால் பெருமளவில் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு விநியோகிக்கப்படாமல், சிங்கள, முஸ்லிம் மக்களுக்கே கொடுக்கப்பட்டதாக ஒரு தகவல் வெளிவந்துள்ளது.

ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் இந்தப் பாரபட்ச நடவடிக்கை குறித்து விஷயம் புரியாதவர்கள், போதிய விளக்கம் இல்லாதவர்கள், ஐ. நா. உணவு விவசாய ஸ்தாபனத்தின்மீது கோபம் கொள்ளலாம். அந்தச் சர்வதேச நிறுவனமே தமிழர்களை புறக்கணிக்கத் தூண்டுதலாக இருக்கிறதோ என்று கண்டிக்கலாம்.

ஆனால் பாரபட்ச நடைமுறை கொழும்பு அரசாங்கத்தினால்—சம்பந்தப்பட்ட அமைச்சினால்—சமூகநலத்துறை அமைச்சினால் — அமைச்சரினால் — அமைச்சு அதிகாரிகளால் — வகுக்கப்பட்டதேயன்றி உதவி வழங்கிய நிறுவனத்தால் அல்ல. ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் எந்த அமைப்பானாலும், தனது நிதி மற்றும் பொருள் உதவிகளை சம்பந்தப்பட்ட நாட்டின் அரசாங்கத்துக்கு வழங்குவதே நடைமுறை. அதுவே அவற்றுக்குரிய விதி முறையுமாகும்.

குறிப்பிட்ட திட்டத்துக்கு அல்லது செயற்பாட்டுக்கு என்று உதவிகளை குறித்து ஒதுக்கி ஒரு நாட்டின் அரசாங்கத்திடம் ஒப்படைப்பதே வழமையான விதிமுறை. நாட்டிற்கென ஓர் அரசாங்கம் இருக்கும்போது, ஐ. நாவின் அமைப்புகள் தமது உதவிகளை மக்களிடம் நேரடியாக வழங்குவதில்லை.

ஐ. நாவின் அமைப்புகள் மட்டுமன்றி ஏனைய சர்வதேச தொண்டர் மற்றும் உதவி நிறுவனங்களும் தமது உதவிகளை அரசாங்கங்களிடமே நேரடியாக வழங்குவதுண்டு. இந்த வாய்ப்பைச் சாதகமாகிக்கொண்டு, அகதிகளுக்கெனக் கிடைக்கும் வெளியாரின் உதவிகளை, ஸ்ரீலங்கா அரசாங்கம் தனது எண்ணப்படி பயன்படுத்துகின்றது. தமிழர்களுக்கு நியாயப்படி கிடைக்க வேண்டிய பங்கைத் தானும் தராது புறக்கணிக்கிறது; பாரபட்சம் காட்டுகிறது.

கடந்த இரண்டரை வருடங்களாக — யுத்தம் தொடங்கியதிலிருந்து — நிவாரணம் வழங்குவதில் கூட அரசு தமிழர்களைப் புறக்கணித்தும், பாரபட்சம் காட்டியும் வருகிறது. இது குறித்து வெறுமனே செய்தி வெளியிட்டோ அல்லது கண்டனம் தெரிவித்தோ ஆகப் போவது ஒன்றுமில்லை.

உதவி வழங்கிய நிறுவனங்களுக்கு பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் நேரடியாக எழுதவேண்டும். பிரஸ்தாப நிறுவனங்கள் வழங்கிய உதவி எதுவும தமக்குக் கிடைக்கவில்லை என்று முறையிட வேண்டும். ஸ்ரீலங்கா அரசின் நியாயமற்ற, மனித நேயமில்லாத செயலை ஆதாரங்களுடன் தெரியப்படுத்த வேண்டும்.

அப்படிச் செய்யும் பட்சத்தில் அந்த நிறுவனங்கள் தமது உதவிகள் எவ்வாறு விநியோகிக்கப்பட்டன, பங்கிடப்பட்டன என்பதை சுயேட்சையாக விசாரிக்கும். பாதிக்கப்பட்டவர்களிடம் நேரில் தகவல்களை அறிந்து இனிமேல் வழங்கப்படும் உதவிகளை நியாயமான முறையில் விநியோகிக்குமாறு அரசை வற்புறுத்தும்.

ஆகையால் வெளிநாடுகள், நிறுவனங்கள் அரசிடம் ஒப்படைக்கும் உதவிப்பொருள்களும் நிதியும் தமிழர்களுக்குக் கிடைப்பதில்லை என்பதை சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு முறைப்பாடு செய்வதை தமிழர் நலனில் அக்கறையுள்ள சமூக அமைப்புகள் தமது பணிகளில் ஒன்றாகக் கொள்ளவேண்டும். வெறுவாய் சப்பி பசி போகாது! இணற்றுக்குள் பேசுவது வெளியே கேட்குமா?

## குருபட்டமளித்தல்

யாழ்ப்பாணம், பெப். 18

இணுவில் பிரம்மஸ்ரீ சா. குமாரசாமி சர்மா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரன் பிரம்மஸ்ரீ கு. சரவணபவ சர்மாவுக்கு இன்று வியாழன் காலை 8 மணிக்கு இணுவில் சிவகாமி அம்மன் ஆலயத்தில் ஆசார்யாபிஷேகம் (குருப் பட்டமளித்தல்) நடைபெறும். (க)

## இன்று

யாழ்ப்பாணம், பெப். 18

யாழ். மாவட்டத்தில் உள்ள சகல திணைக்கள தலைவர்களுக்கான விசேட கூட்டம் ஒன்று இன்று காலை 9. 30 மணிக்கு செயலக கேட்போர் மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. முக்கிய சில பிரச்சினைகள் குறித்து இக் கூட்டத்தில் ஆராயப்படவிருக்கிறது [உ 3]

o o o

வயாவிளான் மத்திய மகா வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு உரும்பராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் அதிபர் திரு. ஆ. சி நடராஜா தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக கல்விப்பணிப்பாளர் திரு இ. சுந்தரலிங்கம் கலந்து கொள்வார். [ஒ-89]

## நாளை

உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் 125ஆவது ஆண்டு நிறைவு விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணிககு கல்லூரியில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா கலந்து கொள்வார். (க-109)

★ ★ ★

யாழ். பாரதி இளைஞர் அறிவியற்கழக வெளிக்கள, மக்கள் தொடர்புப் பிரிவு நடத்தும் "புரிந்துணர்வு தினம்" நாளை வெள்ளிக் கிழமை நடைபெறவுள்ளது.

இளைஞர், யுவதிகள் பங்குபற்றவுள்ள இத்தினத்தில் அருட் தந்தையர், ஆசிரியர்களின் உரைகளும், அறிவு சார்ந்த போட்டிகளும், கலை நிகழ்வுகளும் இடம்பெறும். [க]

★ ★ ★

யாழ்ப்பாணம், பெப். 18

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மெய்வல்லுநர் விளையாட்டுக் கழகங்களின் தலைவர்களுக்கான சந்திப்பு நாளை முற்பகல் 11 மணிக்கு துன்னாலை ஞானிசாரியார் கல்லூரியில் நடைபெறும். (உ-20)

★ ★ ★

மந்திகை, பெப். 18

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கான பொதுக்கூட்டம் நாளை முற்பகல் 10 மணிக்கு பல்கலைக்கழக மண்டபத்தில் நடைபெறும்.

★ ★ ★

யாழ்ப்பாணம், பெப். 18

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தினரால் வழங்கப்படும் குழந்தைசண்முகலிங்கத்தின் "யார்க்கெடுத்துரைப்பேன்" நாடகம் நாளை பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரகல்லூரியில் இடம்பெறும். [இ-15]

## வார இறுதி கிரிக்கெட்

யாழ்ப்பாணம், பெப். 18

யாழ் மாவட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்று வரும் சினேகபூர்வ கிரிக்கெட் போட்டிகளில் இவ்வாரத்தில் நடைபெறும் மற்றும் சில ஆட்டங்கள் வருமாறு:-

★ சென் பற்றிக்ஸ் எதிர் கனகரத்தினம் ம. ம. வி — சென். பற்றிக்ஸ் மைதானத்தில் (இன்று பிற்பகல் 3 மணி முதல், நாளை காலை 8 30 மணி முதல்)

★ யாழ். மத்திய கல்லூரி எதிர் மானிப்பாய் இந்து — யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் (நாளை காலை 8.30 மணி முதல்)

★ யாழ். மத்திய கல்லூரி எதிர் ஸ்கந்தவரோதயா — யாழ். மத்திய கல்லூரி மைதானம் (நாளை மறுதினம் 8.30 மணி முதல்)

# டாக்டர்களாக 57 பேர் சித்தி

யாழ்ப்பாணம், பெப். 18

யாழ். பல்கலைக்கழகம் நடத்திய 1992 நவம்பர் எம். பி. பி. எஸ். இறுதிப் பரீட்சையின் முடிவுகள் வெளியாகியுள்ளன. 57 மாணவர்கள் இப் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர்.

பரீட்சை முடிவு விவரம் வருமாறு:

முதலாம் வகுப்பு — செல்வி எஸ். சிறீரங்கநாதன் (மருத்துவம், குழந்தை இயல், பிரசவ இயல், பெண் நோயியல் ஆகியவற்றில் அதிவிசேட சித்தி)

இரண்டாம் வகுப்பு — செல்வி என். டி. அந்தோனிமுத்து. செல்வி ஐ ஏ. ஏ. பேர்டினன்ட், செல்வி சி. அரியரத்னம். எஸ். அசோகன், எஸ் அசோக்குமார், செல்வி எச் துரைசாமி, செல்வி ஆ. விசாகப்பெருமாள், பி. ஜீப்பரா, எஸ். ஜீவதரன், செல்வி ஜே. ஜெயராசா, செல்வி கே. துரைராசா, செல்வி எஸ். கனகலிங்கம், செல்வி எம் திசவீரசிங்கம், செல்வி ஆர். நமசிவாயம், செல்வி என். ராஜசேகரன் ரி. பேரானந்தராஜா, பி. பிரபாகரன், கே. ராஜசேகரன், செல்வி ஆர் தர்மலிங்கம், செல்வி எஸ். சடாட்சரநாதன், செல்வி என். ஏ செபமாலை, செல்வி என் செல்லத்துரை, எஸ். சிவநாதன், செல்வி எஸ். எஸ். பாநாதன், செல்வி ரி, பத்மநாதன், ரி. திருவல்லபன், எம். தியாகராசா, கே. உமாபதி, (மருத்துவம் பிரசவ இயல், பெண் நோயியல் ஆகியவற்றில் அதி விசேட சித்தி) செல்வி வி. வேலுப்பிள்ளை ஆகியோர்.

சித்தி: கே. அருளானந்தம், செல்வி ஏ. செல்லையா, செல்வி சி. வாமதேவன், செல்வி டி. நவரத்தினம், எஸ். ஜெயக்குமார், செல்வி கே. சிவானந்தம், ரி. கேதீஸ்வரன், செல்வி கே. சண்முகதாஸ், ரி. ஈ. மல்கொம், வி. நல்லைநாதன், எஸ். நவநீதன், செல்வி கே. பொன்னுத்துரை, வீ. ராஜசேகரன். டி. ரஞ்சித், செல்வி எஸ். ரத்னசபாபதி, ஏ சத்தியசீலன். பி. சிவானந், செல்வி எஸ். சிவஞானம், கே. சிவகாந்தன், ரி சிவசீலன், எஸ் சிவயோகன், எஸ். சுதன், செல்வி வி. இருபைராசா, வீ. முரளி, செல்வி சி. நடராசா, ஏ. சபேசன், எஸ். சிவயோகன் ஆகியோர். (க)

## இன்றைய உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், பெப். 18

யாழ். வட்ட லியோ கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை சென் அன்ரனீஸ் அணியை எதிர்த்து சென். நிக்கிலாஸ் அணியும், பாடும்மீன் அணியை எதிர்த்து சென். றோக்ஸ் அணியும் மோதும். இந்த ஆட்டம் கண்டி வீதி செம்மணியில் உள்ள அரியாலை மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறும். (உ)

## கண்காட்சி

யாழ் மிட் ரவுண் றோட்டறக்ட் கழக ஏற்பாட்டில் கோலம், மீன்கள், முத்திரைகள் மற்றும் விளக்கு வகைகள் அடங்கிய கண்காட்சி நிகழ்ச்சி ஒன்று யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவிருக்கிறது

நாளை நண்பகல் 12 மணி முதல் இரவு 10 மணிவரையும், தொடர்ந்து சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரையும் இக்கண்காட்சி நடைபெறும். (உ)

## உணவு வகை தயாரிப்பு போட்டி

யாழ்ப்பாணம், பெப். 18

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மகளிர் அபிவிருத்தி நிலையம் யாழ் கல்வித் திணைக்கள மனைப் பொருளியற் பிரிவினருடன் இணைந்து உள்ளூர் உணவுப் பொருள்களிலிருந்து சிறந்த புதிய உணவு வகைகளைத் தயாரித்தல் என்ற விடயத்திலான போட்டி ஒன்றை நடத்தவிருக்கிறது.

பாடசாலை மாணவர்களும், மகளிர் குழுக்களும், தனியாரும், நிறுவனங்களும் பங்குபற்றக்கூடிய இப்போட்டிக்கு, எதிர்வரும் சனிக்கிழமைக்கு முன் விண்ணப்பிக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. (க)

## கோழிகளுக்கு தடுப்பூசி

உடுவில், பெப் 18

சுன்னாகம் கந்தரோடைக் கிராமத்தில் நாளை வெள்ளிக் கிழமை கோழி நோய்த் தடுப்பூசி போடப்படும என அறிவிக்கப்பட்டுள்ளது.

காலை 8 மணிக்கு ஞானவைரவர் ஆலய சனசமூக நிலையத்திலும், காலை 9 மணிக்கு தமிழ்க் கந்தையா வித்தியாசாலையிலும், காலை 10 மணிக்கு கலைமதி சனசமூக நிலையத்திலும் தடுப்பூசி போடப்படும்.

உ

வண்ணை - சாந்தையர்மடம்
ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில்
சைவ சமய அபிவிருத்திக் கழகம்

★ மேற்படி எமது கழகத்தினால் 07 - 02 - 1993 ஞாயிறு அன்று நடத்தப்பட்ட சைவ சமய அறிவுப் பரீட்சையின் பெறுபேறுகளை ஆலய வாயிலில் பார்வையிடலாம்.

★ பரிசளிப்பு வைபவம் 19 - 02 - 1993 வெள்ளிக் கிழமை சிவராத்திரி அன்று இரவு 7 00 மணிக்கு நடைபெறும்.

— சைவ சமய அபிவிருத்திக் கழகம்.

(24493)

இளங்கலைஞர் மன்றத்தின்
13ஆவது இசை விழா

இடம்: மன்றக் கலா மண்டபம், சட்டநாதர் வீதி, நல்லூர்.

10ஆம் நாள் 18-02-93 வியாழன்

நல்லூர் ப. நோ. கூ. சங்கத்தின் ஆதரவில்

மாலை 4-00 — 5-00 மங்கள இசை
நாதஸ்வரம்: என். கோவிந்தராஜன், ரி. செல்வக்குமார்
தவில்: ஏ மீனாட்சிசுந்தரம், எஸ். தட்சணாமூர்த்தி, எஸ். விஜயகுமார், எஸ். சதீஸ்குமார்

5-00 — 5-15 வீணை
எஸ். லுசாந்தி, எஸ். சர்வலோகநாயகி, எஸ், லக்ஷ்மி, நித்தில அரசி
மிருதங்கம் — எஸ். கஜிதரன்

5-15 — 5-30 பாட்டு
இ குமாரிபுஷ்பா, பா. பிரதிபன், இ. காயத்திரி, சி. விஜிதா, ப. அர்பணா, சி சிவப்பிரியா, சி. சுமங்களா, ப. வைதேகி, சி. சுசிலா, பா. ஜெயராணி, சு. சுபாஷினி, சு. கானப்பிரியா, ச. சுவேந்திரா, சி சயந்தன, த அபிராமி, ச. தனுஷன்
வயலின் — வி. கௌரி
மிருதங்கம் — ரி. திருக்குமரன்

5 3) — 6-00 வீணை
எம் சோமசுந்தரசர்மா
மிருதங்கம் — எஸ். துரைராஜா

6-00 — 6-45 வயலினிசை
வயலின் — எஸ். கோபிதாஸ்
மிருதங்கம் — கே. கண்ணதாஸன்
கடம் — சதா வேலமாறன்

6-45 — 7-00 மங்கள விளக்கேற்றல்
திரு க. பாலசிங்கம் (சித்திராலயா)
திரு. து. சிவராசா (வர்த்தகர்)
திரு இ. சற்குருநாதன் (வர்த்தகர்)
தலைவர்: இ. ராஜேஸ்வரன் (தலைவர், நல்லூர் ப. நோ. கூ. சங்கம்)
சிறப்பு விருந்தினர்: எஸ் வேலாயுதம் (பிரதிக் கல்விப்பணிப்பாளர்)

7-00 — 8-00 இசைக் கச்சேரி
பாட்டு — எஸ். சிவஞானசேகரம்
வயலின் — ஆர். ராதாகிருஷ்ணன்
மிருதங்கம் — எஸ். துரைராஜா

8-00 — 9-15 நாதஸ்வர இசை
நாதஸ்வரம் — என். கபிலதாஸ்
— ஏ. மகேந்திரன்
தவில் — பி. கணேசன்
— என் கணேசன்
— வி. ராமச்சந்திரன்

வாழ்த்துபவர்:
ஸ்ரீ அம்பாள் ஸ்ரோர்ஸ்,
திருநெல்வேலிச் சந்தி,
யாழ்ப்பாணம்.

(ஸி-4505)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி அன்று தம்பிராஜா

செல்லர் வளவு, பண்டத்தரிப்பைச் சேர்ந்த திருமதி அன்று தம்பிராஜா காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற சைமன் தம்பிராஜாவின் அன்பு மனைவியும், இராஜேந்திரம் (சிங்கப்பூர்), காலஞ்சென்ற இரத்தினம் ஜோர்ஜ், அருள்திரு ஜெறாமியஸ் அரசரெட்ணம் (வியாகுலமாதா ஆலயம், மட்டக்களப்பு), இம்மானுவேல் இராசதுரை (இளைப்பாறிய ஆசிரியர் சென். ஹென்றீஸ் இளவாலை — லண்டன்), திருமதி அஞ்சலா ஜெகநாதன் (கனடா), றொபேட் (துறைமுகக் கூட்டுத்தாபனம், கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி மணி இராசேந்திரம், காலஞ்சென்ற திருமதி ராணி இரத்தினம், திருமதி திரேசா இம்மானுவேல், திரு ஜெகநாதன், திருமதி பவளம் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் பண்டத்தரிப்பு தியான இல்லத்தில் இருந்து இன்று காலை 10 30 மணிக்கு பாத்திமா மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
(24504) அருள்திரு அரசரெட்ணம் அடிகளார்

## திருமதி சரவணமுத்து சிவபாக்கியம்

மட்டுவில் தெற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற பொலீஸ் உத்தியோகத்தர் சரவணமுத்துவின் அன்பு மனைவி சிவபாக்கியம் கனடாவில் காலமானார்

இவர் சிவராசா (பொறியியலாளர், அவுஸ்திரேலியா), லோகேஸ்வரன் (கனடா), சாந்தசற்குணம் (கனடா), கிருபாகரன் (கனடா), சர்வானந்தன் (டென்மார்க்), நித்தியானந்தன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், மீனா (அவுஸ்திரேலியா), சவுந்தரகுமார் (கனடா), சாந்தரூபி (கனடா), ஆகியோரின் அன்பு மாமியாரும், றஜீவ், சுஜன், சித்திரா, ஜனனி ஆகியோரின் அன்புப் பேத்தியும், செல்லத்துரை, தியாகராசா ஆகியோரின் சகோதரியுமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இ. கனகசபை

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி. [24501]

## கந்தையா நாகராசா

அளவெட்டி வடக்கை (புதுவளவு) பிறப்பிடமாகவும், ஊரெழு மேற்கை (ஆலடி-லேன்) வசிப்பிடமாகக் கொண்டவரும், அளவெட்டி, மல்லாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியருமாகிய கந்தையா நாகராசா காலமானார்.

இவர் தனபூபதியின் அன்புக் கணவர் ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
தனபூபதி நாகராசா
(ஆத்தை—மனைவி)

வா. நடராசா (யப்பான்)
ஆலடி லேன்,
ஊரெழு மேற்கு,
சுன்னாகம். [24502]

## பொன்னையா மயில்வாகனம்

நயினாதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், புங்குடுதீவு 5ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகக் கொண்டவரும், தற்போது இல. 91, புங்கன்குளம் வீதி, கொழும்புத்துறையில் வசித்துவருமாகிய பொன்னையா மயில்வாகனம் சிவபதம் அடைந்துவிட்டார்.

இவர் மங்கையர்க்கரசியின் அன்புக் கணவரும், பொன்னையா, நேசதுரை, சிவலிங்கம். நாகேஸ்வரன், சுசீலாதேவி, இந்திராணி ஆகியோரின் அன்புத் தந்தையும், விக்னேஸ்வரி, புஷ்பசுலோசனா, ஐடா, கேதீஸ்வரன், நடனசிவா ஆகியோரின் அன்பு மாமனாரும், அபிராமி, மிசன்னா. பிரதீப் சதீஸன், லக்ஷ்யா, காயத்திரி, சோபிகா, அனோச், வினோச், தனுஷா ஆகியோரின் அன்புப் பேரனாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (18-02-1993) வியாழக்கிழமை காலை 10மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, ஈமக்கிரியைக்காக பூதவுடல் துண்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி - மங்கையர்க்கரசி.

இல. 91,
புங்கன்குளம் வீதி,
கொழும்புத்துறை. (24497)

## நாகலிங்கம் சண்முகம்

(வர்த்தகர், ஊர்காவற்றுறை)

நாரந்தனை வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட நாகலிங்கம் சண்முகம் சிவபதமடைந்துவிட்டார். இவர் காலஞ்சென்ற அப்பாவர் நாகலிங்கம் செல்லமுத்து தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற நாகலிங்கம் (பிரபல நகை வியாபாரி, நாரந்தனை), சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், நகுலாம்பிகையின் அன்புக் கணவரும், பஞ்சலிங்கத்தின் (சக்தி, வர்த்தகர், ஊர்காவற்றுறை, மானிப்பாய்) அன்புத் தந்தையும், திலகவதனியின் (உடுவில்) அன்பு மாமனாரும், ஜனகா, நிசாந்த், ஜசிந்தா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற கந்தசாமி (கந்தர்மடம்) தியாகராஜா (ஓய்வுபெற்ற ஆசிரியர்,சித்தன்கேணி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 14-02-1993 இல் நாரந்தனையில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் யாபேரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:

க. தம்பையா
122/15A பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.
24500

ச. நகுலாம்பிகை
(மனைவி)
ச. பஞ்சலிங்கம்
(சக்திவேல்)
(மகன்)

## விண்ணப்ப திகதி நீடிப்பு

யாழ்ப்பாணம். பெப். 18

தமிழீழ விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பால் நடத்தப்படும் அன்னை பூபதி பொதுஅறிவுத் தேர்வுக்கான விண்ணப்ப முடிவுதினம் எதிர்வரும் 22 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது

[உ]

## ஆலயங்களில்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
அறிவிக்கப்பட்டுள்ளது.

அளவெட்டி தெற்கு - நாகேஸ்வரம் - ஸ்ரீ நாகவரத நாராயணர் ஆலயம், இருபாலை கற்பகப் பிள்ளையார் கோவில், வட கோவை ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி, கோவில், அட்டகிரி விஸ்வநாத விசாலாட்சி அம்மன் கோவில், ஊரெழு - சக்திபுரம் சிவபூரணி காளியம்மன் ஆலயம் —

சாவகச்சேரி, கச்சாய் வீதி முருகமூர்த்தி ஆலயம், கொக்குவில் ஸ்ரீ சாயி துர்க்கா தேவி ஆலயம், நீராவியடி ஸ்ரீ ஜெய வீரசக்தி விநாயகர் ஆலயம், உரும்பராய், வடக்கு பேச்சியம்மன் ஆலயம், ஈச்சமோட்டை கலட்டிப்புலம் ஸ்ரீ ஞானவைரவர் ஆலயம், மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் கோவில், நீராவியடி தோப்பு மாணிக்கப் பிள்ளையார் ஆலயம் ஆகிய தேவஸ்தானங்களிலும் சிவராத்திரிக்குரிய நான்கு சாமப் பூசைகளும், சமய நிகழ்ச்சிகளும் இடம் பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் ஸ்ரீ பகவான் சத்தியசாயி சேவா சமத்தியின் திருநெல்வேலி மண்டபத்தில் நாளை மாலை முதல் சனி காலை வரை பஜனை, நற்சிந்தனை ஆகியன இடம் பெறும். (அ)

## திருத்தம்

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் — யாழ்ப்பாணக் கிளைத் தலைமை அலுவலகத்தினர், நேற்றைய உதயனில் வெளியிட்ட —

ஊர்காவற்றுறை பிரிவுக் குழு உறுப்பினர் தெரிவுக்கான விசேட பொதுக்கூட்டம் பற்றிய விளம்பரத்தில்—

நியமனப் பத்திரங்களை **03 - 03 - 1993** தொடக்கம் கிளையில் பெற்றுக்கொள்ளலாம் என்றிருக்க வேண்டியது —

**30-03-1993** தொடக்கம் பெற்றுக்கொள்ளலாம் என்று தவறுதலாக அச்சாகிவிட்டது. திருத்தி வாசிக்கவும்.

# மரண அறிவித்தல்

## நாகலிங்கம் கதிரமலை

குப்பிளானை பிறப்பிடமாகக் கொண்டவரும், கோண்டாவில் கிழக்கில் வசித்தவருமான நாகலிங்கம் கதிரமலை காலமானார். இவர் காலஞ்சென்ற நாகலிங்கம் கனகம்மா தம்பதிகளின் அருந்தவப் புதல்வனும், மனோன்மணியின் அன்புக் கணவரும், பரமேஸ்வரி, மகாலஷ்மி ஆகியோரின் அன்புச் சகோதரரும், கற்பகானந்தா (லண்டன்), கலைவாணி, மணிமேகலா, சதாசிவம், குகானந்தன் ஆகியோரின் தந்தையுமாவார். ஈமக்கிரியைகள் இன்று (18-2-93) அன்னாரின் கோண்டாவில் இல்லத்தில் நடைபெறும்.

இத்தகவலை உற்றார், உறவினர் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
வரதன்
(பேறாமகன்)

இருபாலை றோட்,
வன்னியசிங்கம் வீதி,
கோண்டாவில் கிழக்கு
கோண்டாவில்.

(24507)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 18-02-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

உ

உரும்பராய்

ஞானவைரவசுவாமி தேவஸ்தானம்

# மகா சிவராத்திரி விழா

நிகழ்ச்சிகள்

## 19-02-1993 வெள்ளி

காலை 7-00 மணி சங்காபிஷேகம் ஆரம்பம்
மங்கள இசை: திரு. ப. சிவதாஸ் குழுவினர்
மாலை 5-30 மணி அபிஷேகமும்
முதல் சாமப் பூசையும்
இரவு 6-30 மணி இசைக்கச்சேரி
சங்கீத வித்துவான்:
திருமதி சாந்தினி மகாதேவா — பாட்டு
வித்துவான் ஆர். எஸ். கேசவமூர்த்தி — வயலின்
சங்கீதரத்தினம் எஸ். மகேந்திரன் — மிருதங்கம்
இரவு 7-30 மணி கூட்டுப்பிரார்த்தனை
தொண்டர் சபை
இரவு 8-30 மணி அபிஷேகமும்
இரண்டாம் சாமப் பூசையும்
இரவு 9-30 மணி பட்டிமண்டபம்
நடுவர்: கம்பவாரிதி திரு. இ. ஜெயராஜ்
(அமைப்பாளர் அ. இ. க. கழகம்),
பொருள்: ''கற்றோர் மனதைப் பெரிதும் கலங்கச் செய்வது''

கண்ணப்பனின் தியாகமே
திரு. த. சிவகுமாரன், திரு. க. குமாரதாசன், திரு. க. ஜெயநிதி

சிறுத்தொண்டரின் தியாகமே
திரு. இரா. செல்வவடிவேல், திரு. பொ. சோதிலிங்கம், திரு. ச. மணிமாறன்

இயற்பகை நாயனாரின் தியாகமே
திரு. ஆறு. திருமுருகன், திரு. க. ரகுபரன், திரு. ஸ்ரீ. பிரசாந்தன்

இரவு 11 30 மணி அபிஷேகமும்
லிங்கோற்பவ பூசையும்

## 20-02-1993 சனி

அதிகாலை 1-00 மணி மிருதங்கக் கச்சேரி
இளங்கலைஞர்கள்
(திரு. ச. குணசிங்கத்தின் மாணவர்கள்)
அதிகாலை 2-00 மணி இன்னிசை வார்ப்புகள்
'இந்த மண் எங்களின் சொந்த மண்' புகழ்
மெல்லிசைவாணர் ஜி. சாந்தன் குழுவினர்
காலை 5-30 மணி அபிஷேகம்,
தீர்த்தோற்சவம், அன்னதானம்

★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ★

(சைக்கிள் பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது;
அன்பளிப்பு ரூபா 2/-

இவ்வண்ணம்:
மேற்படி கோயில் தர்மகர்த்தா சபை.

கோப்பாய் வீதி, உரும்பராய். (24495)

# மரண அறிவித்தல்கள்

## சுப்பிரமணியம் செல்லம்மா

புங்குடுதீவை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் முருகமூர்த்தி வீதியை வசிப்பிடமாகவும் கொண்டவரும், சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியுமான செல்லம்மா நேற்றுக் காலமானார்.

இவர் கமலாதேவி, நாகேஸ்வரி, கதிர்காமநாதன், மகேஸ்வரி, சண்முகநாதன், பரமேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், பரமலிங்கம், ஜீவரட்ணம், மகேஸ்வரி, தனபாலன். மகேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியும், ரஜனி, ரஜனிகாந்தன், யாழினி. சிவகுமார், சிவகாந்தன், சசிகலா, சசிரேகா, சரண்ராஜ், ஜெகதீஸ்வரி, தயாழினி, காந்தரூபன், தவரூபன், ஆகியோரின் அன்புப் பேத்தியும், ஆறுமுகம், ராமலிங்கம், ராமசாமி, காலஞ்சென்றவர்களான பொன்னாச்சி, சின்னத்தங்கம், சின்னப்பிள்ளை ஆகியோரின் சகோதரியும், நல்லையா, பொன்னம்மா, நல்லம்மா, பூரணம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இல்லத்தில் ஈமக்கிரியை இன்று 18-02-93 பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நாதன்
(மகன்)

36, முருகமூர்த்தி வீதி,
வண்ணார்மண்ணை. (24505)

## கனகேஸ்வரி பசுபதிப்பிள்ளை

இணுவில் மேற்கை சேர்ந்த திருமதி கனகேஸ்வரி பசுபதிப்பிள்ளை [ஓய்வுபெற்ற ஆசிரியை யா / அ. மி த. க. பாடசாலை, இணுவில்] காலமானார். அன்னார் காலஞ்சென்ற கே. பசுபதிப்பிள்ளை [அதிபர், தாவடி தமிழ்க் கலவன் பாடசாலை] அவர்களின் அன்பு மனைவியும், தமிழரசி, மதியழகன் (கனடா], கோப்பெருந்தேவன் [அப்பன்], தேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவநேசன் [ஆசிரியர் இணுவில் மத்திய கல்லூரி] அவர்களின் மாமியாரும், யாழினியின் அன்புப் பேத்தியுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1 மணியளவில் தாவடி மயானத்தில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளும்படி பணிவுடன் வேண்டுகின்றோம்.

தகவல்:
மக்கள், மருமகன்

பரராஜசேகரப் பிள்ளையார் கோவிலடி,
இணுவில். [24503]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org